# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரித்தல் மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA

**தயாரித்தல் மற்றும் பணிகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2023 நவெம்பரில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன**

**தயாரிப்புக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 நவெம்பரில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 57.0 ஆக அதிகரித்தது.** இது பருவகால காரணிகளால் தூண்டப்பட்டிருந்தது. அனைத்து துணைச் சுட்டெண்களிலிருந்தும் கிடைத்த சாதகமான பங்களிப்புடன் இச்சுட்டெண் 2023 மாச்சிற்குப் பின்னர் நடுநிலையான அடிப்படை அளவினை விஞ்சியது.

உணவு மற்றும் குடிபானங்கள் அத்துடன் புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறைகளின் தயாரிப்புக்கள் மூலம் புதிய கட்டளைகளில் அதிகரிப்புகள் பெருமளவில் தூண்டப்பட்டிருந்தன. மேலும், உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பருவகால கேள்வியின் காரணமாக, உணவு மற்றும் குடிபானத் துறையின் தயாரித்தல் பெருமளவில் காரணமாக அமைந்தது. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தியில் மேம்படுத்தல்களுக்கிசைவாக தொழில் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் அதிகரித்தன. மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் நவெம்பர் காலப்பகுதியில் நிரம்பலர்களின் விநியோக நேரம் நீட்சியடைந்து இறுக்கமடைந்த வழங்கல் நிலைமைகளை எடுத்துக்காட்டின.


| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சுட்டெண்** | **49.5** | **57.0** | **+** | **வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 50.5 | 60.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 49.5 | 59.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 46.5 | 51.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 52.5 | 59.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 49.5 | 51.5 | + | குறுக்கத்திலிருந்து நீட்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரித்தல் நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்பட்டமைக்கு பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட படிப்படியான மீட்சி பிரதான காரணமாக அமைந்தது. எனினும், 2024 சனவரி தொடக்கம் வலுவுக்கு வரவுள்ள வரித் திருத்தங்கள் பற்றி நிறுவனங்கள் கவலையடைந்து காணப்படுகின்றன.

**தயாரிப்பு கொ.மு.சு 57.0**
**2023 நவெம்பர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் பெறுமதி ஒத்தோபரிலிருந்து 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2023 நவெம்பரில் 49.3 கொண்ட பெறுமதியினைப் பதிவுசெய்தது.

சீனா, இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சு. 2023 நவெம்பரில் உயர்வான வேகத்தில் மேம்பட்ட அதேவேளை, முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் இது ரஷ்யாவில் அதே மட்டத்தில் காணப்பட்டது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் தயாரிப்பு முகாமையாளர் சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 நவெம்பரில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 திசெம்பர் 14 அன்று உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் உலக முழுவதும் 40இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கான கொ.மு. சுட்டெண்களைத் தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2023 நவெம்பரில் 59.4 கொண்ட சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து, பணிகள் நடவடிக்கைகளில் துரிதமடைந்த விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், தொழில்நிலை மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் என்பவற்றில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் மூலம் இது முன்னிலை வகித்திருந்தது.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள், தொழில்சார் பணிகள் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானத் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2023 ஒத்தோபருடன் ஒப்பிடுகையில் 2023 நவெம்பரில் அதிகரித்தன.

அநேகமான துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட சாதகமான அபிவிருத்திகளுக்கிசைவாக தொழில் நடவடிக்கைகள் 2023 நவெம்பரில் தொடர்ந்தும் விரிவடைந்தன. அதற்கமைய, ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளில் சடுதியான அதிகரிப்பின் மூலம் தூண்டப்பட்ட தங்குமிடம், உணவு மற்றும் குடிபானம் தொடர்புபட்ட தொழில் நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டன. கொள்கை வீதங்களில் அண்மைய குறைப்புக்களைத் தொடர்ந்து கொடுகடன் கேள்வியில் அதிகரிப்பிற்கிசைவாக நிதியியல் பணிகள் மேலும் மேம்பட்டன. அதேவேளை, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத் துணைத் துறையும் வழங்கப்படும் பருவகால விலைக் கழிவுகளால் துணையளிக்கப்பட்டு பண்டிகைப் பருவகாலத்திற்கு மத்தியில் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தது.

பருவகால கேள்வியினை நிறைவுசெய்வதற்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டமையினால் தொழில்நிலை அதிகரித்த அதேவேளை நிலுவையிலுள்ள பணிகள் நவெம்பர் காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | ஒத் | நவெ | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **56.2** | **59.4** | + | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | கொ.மு.சு துணைச் சுட்டெண்கள் | | | |
| புதிய வியாபாரங்கள் | 58.5 | 57.6 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 63.0 | 63.6 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.0 | 58.5 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 46.2 | 45.6 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 68.5 | 71.7 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பண்டிகை மற்றும் சுற்றுலாப் பருவகாலங்கள் காரணமாக அடுத்துவருகின்ற மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், நவெம்பரில் தொடர்ந்தும் அதிகரித்தன. எனினும், 2024 சனவரி 01 தொடக்கம் வலுவுக்குவரவுள்ள பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான திருத்தங்கள் தொடர்பில் சில பதிலிறுப்பாளர்கள் தமது கரிசனைகளைத் தெரிவித்தனர்.

**பணிகள்**
**கொ.மு.சு 59.4**
**2023 நவெம்பர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2023 நவெம்பரில் 50.6 ஐப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 நவெம்பரில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டியது.

---

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 திசெம்பர் 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**
**சுட்டெண்**
கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**
மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.
**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்திற்காக பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.